016

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNP8245– வகுப்பறை முகாமைத்துவம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 16.12.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடைதருக.

பகுதி – **I**

1. வகுப்பறை முகாமைத்துவம் என்றால் என்ன? ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறையுடன் சுருக்கமாக விளக்குக.
2. உள்ளடங்கல் கற்றல் சூழலில் ஆசிரியருக்கு வகுப்பறை முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.
3. "திறமையான வகுப்பறை முகாமைத்துவத்திற்கான திட்டமிடல் ஒரு சிக்கலான செயல்முறையாகும்." ஒரு ஆசிரியரால் திறமையான வகுப்பறை முகாமைத்துவத்தைத் திட்டமிடுவதற்கு கருத்தில் கொள்ள வேண்டிய ஐந்து (05) அம்சங்களைக் குறிப்பிடுக.
4. பயனுள்ள வகுப்பறை முகாமைத்துவத்திற்கான ஐந்து (05) கூறுகளை (elements) சுருக்கமாக விளக்குக.
5. ஆசிரியர்கள் செய்யும் வகுப்பறை முகாமைத்துவத் தவறுகள் என்ன?
6. "இன்றைய பெரும்பாலான வகுப்பறைகள், விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்கள் மற்றும் பொதுக் கல்வி மாணவர்களின் கலவையைக் கொண்ட சேர்க்கும் வகுப்பறைகளாகும்." அனைத்து மாணவர்களுக்கும் பயனுள்ள கற்றல் சூழலை உருவாக்க ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய ஐந்து (05) வகுப்பறை முகாமைத்துவ உத்திகளை பட்டியலிடுக.
7. "அறிவுறுத்தல்களின் போது பொருத்தமான அருகாமை, (Appropriate proximity) உள்ளடங்கல் அமைப்பில் சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்திற்கு வழிவகுக்கிறது." பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் இந்த கூற்றை நியாயப்படுத்துக.
8. "அனைத்து மாணவர்களையும் பணியில் கவனம் செலுத்துவது ஒரு ஆசிரியருக்கு சவாலாக உள்ளது." அனைத்து மாணவர்களையும் பணியில் கவனம் செலுத்த ஒரு ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய ஐந்து (05) உத்திகளைக் குறிப்பிடவும்.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. திறமையான வகுப்பறை முகாமைத்துவத்தின் கீழ், மாணவர்களின் மனவெழுச்சி மற்றும் நடத்தை முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது"

**i.** மனவெழுச்சி மற்றும் நடத்தை ஒழுங்கீனம் என்றாரல் என்ன?

**(04 புள்ளிகள்)**

**ii.** விசேட கல்வி அமைப்பில் மாணவர்களின் நேர்மறையான நடத்தையை ஆதரிக்க ஒரு ஆசிரியரால் பயன்படுத்தப்படும் இரண்டு (02) நுட்பங்களைக் குறிப்பிடுக. மற்றும் அதில் ஒன்றை (01) விரிவாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறையில் மனவெழுச்சி ஒழுங்கீனம் (EDB) உள்ள மாணவர்களுக்கு உதவ ஆசிரியராக நீங்கள் பயன்படுத்தக்கூடிய மூன்று (03) பயனுள்ள உத்திகளை சுருக்கமான விளக்குக.

**(08 புள்ளிகள்)**

10. **"எந்தவொரு வகுப்பறையையும் திறம்பட நிர்வகிப்பதற்கு மாணவர்களிடையே கற்றலில் சுய ஒழுங்குமுறையை (Self – regulation) வளர்ப்பது மிகவும் முக்கியமானது."**

**i.** சுய – ஒழுங்குபடுத்தப்பட்ட (Self – regulated) கற்றல் என்றால் என்ன? **(04 புள்ளிகள்)**

**ii.** மாணவர்களிடம் கற்றலில் சுய - ஒழுங்குமுறையின் (Self – regulation) முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

**iii.** மாணவர்களுக்கு பயனுள்ள சுய – ஒழுங்குமுறையை ஆதரிக்க ஆசிரியராக நீங்கள் பயன்படுத்தக் கூடிய மூன்று (03) உத்திகளைக் கண்டறிந்து அவற்றில் ஒன்றை உள்ளடங்கல் வகுப்பறை அமைப்பு தொடர்பாக எடுத்தக்காட்டுக்களுடன் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

11. **"வகுப்பறை முகாமைத்துவத்தின் பின்னணியில், மாணவர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்குவது அவர்கள் கல்வி மற்றும் சமூக விருத்திக்கு உதவும்."**

**i.** வகுப்பறை முகாமைத்துவத்தில் உறவுகளை உருவாக்குவது ஒரு முக்கிய காரணியாக ஏன் கருதப்படுகிறது?

**(04 புள்ளிகள்)**

**ii.** மாணவர்களுடன் நேர் இடைவினைகளை கட்டியெழுப்புவதற்காக ஆசிரியர் ஒருவர் பிரயோகிக்கக்கூடிய எளிய உத்திகள் நான்கை (04) சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களுடன் உறவுகளை கட்டியெழுப்பும் போது ஆசிரியர் எதிர்கொள்ளக்கூடிய இரண்டு (02) சவால்களை அடையாளம் கண்டு அந்த சவால்களை சமாளிக்க ஆலோசனைகள் வழங்குக.

**(08 புள்ளிகள்)**

12. **" திறமையான உள்ளடங்கல் வகுப்பறையை உருவாக்க ஒரு ஆசிரியரால் மாணவர்களின் சமூகத் திறன் மேம்பாட்டை ஆதரிப்பது அவசியம்."**

**i.** சமூக திறன்கள் என்றால் என்ன? (04 புள்ளிகள்)

**ii.** உள்ளடங்கல் வகுப்பறை அமைப்பில் சமூக திறன்களை விருத்தி செய்வது ஏன் முக்கியம் என்பதை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** ஆசிரியர் ஒருவர் அவரது மாணவர்களின் சமூக திறன்களின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக பயன்படுத்தக்கூடிய யாதாயினும் நான்கு (04) உத்திகளை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

13. "வகுப்பறை முகாமைத்துவ சூழலில், நேர்மறையான, பயனுள்ள கற்றல் சூழல்களை உருவாக்குவது மாணவர்களின் கல்வி, மனவெழுச்சி மற்றும் சமூக வெற்றிக்கு பாடசாலை முக்கியமானது."

i. நேர்மறையான கற்றல் சூழல் என்றால் என்ன? **(04 புள்ளிகள்)**

ii. குறிப்பாக உள்ளடங்கல் வகுப்பறையில் ஏன் ஒரு நேர்மறையான கற்றல் சூழலை உருவாக்குவது அவசியமாகிறது? **(06 புள்ளிகள்)**

iii. நேர்மறையான கற்றல் சூழலை கட்டியெழுப்புவதற்காக ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தக்கூடிய யாதாயினும் நுட்பமுறைகள் நான்கை (04) இனங்கண்டு அதில் ஒரு (01) உத்தியை உதாரணங்களுடன் விரிவாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

14. "வகுப்பறை முகாமைத்துவம் என்பது கற்பித்தலின் இதயத்தில் உள்ளது. இது உங்கள் மாணவர்களின் கற்றல் விளைவுகளை பாதிக்கிறது மற்றும் ஆசிரியர்களின் சொந்த நலனில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்."

i. "பயனுள்ள வகுப்பறை முகாமைத்துவம் (Effective Classroom Management)" மற்றும் "மோசமான வகுப்பறை முகாமைத்துவம் (Poor Classroom Management)" ஆகியவற்றுக்கு இடையேயான வித்தியாசத்தை சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

ii. வகுப்பறை முகாமைத்துவத்தில் நான்கு (04) முக்கிய தூண்களின் (Four core pillars) தாக்கத்தை சுருக்கமாக ஆராய்க. **(08 புள்ளிகள்)**

iii. வகுப்பறை முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரிக்கும் போது ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டிய நான்கு (04) நிபந்தனைகளைக் கண்டறிந்து, ஒரு நிபந்தனையை எடுத்துக்காட்டுக்களுடன் விரிவாக விளக்கவும். (08 புள்ளிகள்)

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*